விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2025

-----

வகுப்பு 12

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத் தமிழ்** மதிப்பெண்கள்: 90

பகுதி-I

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். 14×1=14

1)"காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை"- இத்தொடரில் ' கலன் ' உணர்த்தும் பொருள்.

ஆ )போர்க்கருவி ஆ)தச்சுக்கருவி

இ)இசைக்கருவி ஈ)வேளாண்கருவி

2) பதிமூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள் வரை பாடப்படும் வெண்பா .

அ) குறள் வெண்பா ஆ)சிந்தியியல் வெண்பா

இ) பஃறொடை வெண்பா ஈ) கலிவெண்பா

3) பொருத்துக.

அ) தமிழ் அழகியல் -1)பரலி சு.நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ. -2) தி.சு.நடராசன்

இ) கிடை. -3) சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி. -4) கி ராஜநாராயணன்

அ)4,3,2,1 ஆ)1,4,2,3 இ)2,4,1,3 ஈ)2,3,4,1

4) "எனக்கும் மூத்தோன்" என குகனை ஏற்றவர்.

அ)இராமன் ஆ)இலக்குவனன் இ)பரதன் ஈ)சத்ருக்கனன்

5) 'விளியறி ஞமலி' -இதில் குறிப்பிடப்படும் விலங்கு யாது?

அ) எருது ஆ)குதிரை இ)நாய் ஈ)யாளி

6)'காலை இளம் வெயில் நன்றாக மேய,துன்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்'-இக்கவிதையில்________ பயின்று வந்துள்ளது.

அ) பயன் படிமம் ஆ)வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ)உருப்படிமம்

7) தவறான இணையைத் தேர்க.

| பா வகை | | இலக்கியம். |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ)ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள் வெண்பா | - | திருக்குறள் |

8) ஆர்ப்பரிக்கும் கடல் அதன் அடித்தளம் மௌனம்; மகா மௌனம் -அடிகள் புலப்படுத்துவது.

அ) இரைச்சல் ஆ)குறைகுடம் கூத்தாடும்

இ)நிறைகுடம் நீர்த்தழும்பல் இல்

ஈ)புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

9) "பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் கழகத்துக் காலை புகின்" இக்குறள் இடம் பெற்ற அதிகாரம்________

அ) வினைத்திட்பம் ஆ)சிற்றினம் சேராமை

இ)கள் உண்ணாமை ஈ)சூது

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



10) ' யானை புக்க புலம் போல'-இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்.
அ)தனக்கும் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ)தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும் ,தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

11) சங்க இலக்கியத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்.
அ)உவமை ஆ) உவமேயம் இ)உத்தி ஈ) உள்ளுறை உவமம்

12) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்.
அ)ஆய் அண்டிரனும் அதிகனும்
ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும்
ஈ) பாரியும் காரியும்

13) இவர்களில் வேறுபட்டவர்__________
அ)பூமணி ஆ)சிற்பி பாலசுப்பிரமணியன்
இ) தோப்பில் முகமது மீரான் ஈ) சாந்தா தத்

14) Rubber Stamp-என்பதன் கலைச்சொல்
அ)மை பொதி ஆ) மடிப்புத்தாள்
இ) இழுவை முத்திரை ஈ)அழிப்பான்

பகுதி- II

பிரிவு -1

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3×2=6

15) எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப் படுத்துகிறார்?
16) 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் 'தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.
17) மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?
18) செவியறிவுறூஉ துறையை விளக்குக .

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4

19) சங்ககாலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
20) பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
21)' தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

பிரிவு -3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

22) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
விலை, விளை,விழை
23) வல்லின மெய்களை ஈட்டும் நீக்கியும் எழுதுக.
எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையயின்றி துன்புறுவாய், நிறைய தன்னம்பிக்கை கொள்.
24) பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்
ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்
25) ஏதேனும் ஒன்றுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) பொலிந்தான் ஆ) செய்த

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

26) ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சி விதி தருக .
அ) செம்பரிதி. ஆ) ஏழையென

27) பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
களம்- கலம்

28) பாவிகம்- விளக்குக.

29) மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) ஆணி அடித்தாற் போல
ஆ) வழி வழியாக

30) ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அ) Teller ஆ) Mobile Banking

## பகுதி-III

### பிரிவு -1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2×4=8

31) குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

32) வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

33) மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.

34)' ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2×4=8

35) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

36) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பவனவற்றைக் குறிப்பிடுக.

37) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38)மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு -3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3×4=12

39)அ)அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகழ்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்-இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

ஆ)ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

( அல்லது)

ஆ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

41) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
1) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.
2) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
3) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.
4) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

42) இலக்கிய நயம் பாராட்டுக.
வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்



www.Padasalai.Net

மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே .
-திரிகூட ராசப்ப கவிராயர்

43) தமிழாக்கம் தருக.

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself , irrespective of the economic rates of return.

## பகுதி -IV

அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும். 3×6=18

44) அ)பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது).

ஆ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப் படுத்தும் -இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

45)அ) பண்டைக்கால கல்வி முறையில். ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

( அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

46)அ)'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு'-இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியவை யாவை?

( அல்லது)

ஆ) உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.

## பகுதி - V

47)அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

அ) 'துன்பு உளது' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

ஆ) 'அரண் 'என முடியும் குறளை எழுதுக.

-------

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com